முருகப்பெருமான் துணை

**மகான் எறிபத்த நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**17.04.2021**, சனிக்கிழமை

1. ஞான சக்தியாக அவதாரம் புரிந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
தானதரும பலத்தை கூட்டி
தரணி காத்திட வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் யோகபிரசன்ன ஆசி
ஆசிபட பிலவ தகரின் திங்கள்
அறிவிக்க சதுர்திகதி காரி வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 4ம் நாள், 17.04.2021 சனிக்கிழமை)
3. வாரமதில் எறிபத்த நாயனாரும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
தரமான நல்லுலகம் அமைய
தரும வழி காட்டும் அரங்கன்
4. அரங்கன் அருள் உபதேசம்
ஆற்றல்தரும் ஞானமாக இருக்க
வரங்களாக எண்ணி மக்கள்
வணங்கி அருள் உபதேசம் ஏற்க
5. ஏற்கவே மெய்ஞான கதியும்
இலகுவாய் மக்கள் அடைந்து
அற்புதம் படைப்பர் உலகில்
ஆறுமுகன் அருளும் தயவும் கூடி
6. கூடியே கலியுக மக்கள்
குருநிலை ஞான மேல்நிலை
திடம்பெற உலகோர் கண்டு
தெய்வநிலைதனை அடைவர்
7. அடையவே ஆக்க சக்தியான
அரங்க ஞானி வாழும் குடிலை
தடையற மக்கள் வந்து
தவம் இயற்ற தருமம் தொடர
8. தொடரவே மக்களிடை தெளிவு
திருவருள் போல உருவாகி
இடர் வெல்லும் சக்திகளும்
இந்த யுகத்தை மாற்றும்
9. மாற்றும் குணமும் பலமும்
மறுமை வெல்லும் திடமும்
ஏற்றமும் கண்டு உயர்வர்
ஏழாம்படைவீடு நோக்கி வர

10. வருகவே மக்களின் சக்தி
வடிவேலன் சூட்சும சக்தியாக
தரும ஞான சித்தியாக
தலைமை முனி ஆசியுமாக

11. ஆசியுமாக மாற்றம் கிட்டி
அரங்க ஞானி வழிகாட்டலில்
வசமாகும் ஞானயுகமாக
வழங்கிய யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—